செ.வெ.எண்: 186 நாள்: 29.02.2020

# புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டையில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் கட்டப்பட்ட புதிய கட்டட திறப்பு விழா மற்றும் புதிய கட்டட பூமி பூஜையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (29.02.2020) துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மருத்துவத்துறையில் மருத்துவ உபகரணங்கள், புதிய கட்டடங்கள் போன்ற பல்வேறு அடிப்படை தேவைகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டையில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட நோய்தடுப்பு மருந்து கிடங்கு கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் 137.91 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.123.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் தரைத்தளம் 165.09 ச.மீ பரப்பளவிலும்,

முதல்தளம் 303 ச.மீ பரப்பளவிலும் என மொத்தம் 468.09 ச.மீ பரப்பளவில் கட்டப்பட உள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டப்பட்டு சி.டி ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன், கேத்லேப், டயாலிசிஸ்பிரிவு போன்ற பல்வேறு உயர்தர சிகிச்சைப் பிரிவுகளுடன் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இதேபோன்று சிறுநீரகம் தொடர்பான பல்வேறு சிகிச்சைகளுக்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் சிறுநீரக ஒப்புயர்வு மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கும் வகையில் பல்வேறு மருத்துவ வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே சுகாதாரத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் நித்தியாநந்தன், உதவி பொறியாளர் பார்த்திபன், பொதுசுகாதார துணை இயக்குநர் அர்ஜுன்குமார், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட கூட்டுறவு அச்சக சங்கத்தலைவர் சேட், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**